Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 21, 2024 | இதழ் 99

# தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை மத்திய பட்ஜெட்டில் நிறைவேற்ற வேண்டும் : ஸ்டாலின் வலியுறுத்தல்

## தாம்பரம் - செங்கல்பட்டு மேம்பால திட்டத்துக்கு அனுமதி புதிய ரெயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு



சென்னை, 21 ஜூலை 2024: மத்திய அரசு நாளை மறுநாள் (23 ந் தேதி) தாக்கல் செய்ய உள்ள 2024 ம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் தமிழ்நாடு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நாளை 22-ந் தேதி தொடங்கும் எனவும், ஜூலை 23-ந் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் எனவும் மத்திய அரசு கடந்த 6-ந் தேதி அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அதன்படி நாளை (திங்கட்கிழமை) பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்குகிறது.

நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) நடப்பு நிதியாண்டுக்கான (2024-2025) மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள மத்திய பட்ஜெட்டில்,

* மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

* தாம்பரம் - செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத் திட்டத்திற்கான ஒப்புதல் அளிக்க வேண்டும்.

* பத்தாண்டுகளாக வருமான வரிச் சுமை குறைக்கப்படும் என்ற நடுத்தரக் குடும்பங்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

* கோவை மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான ஒப்புதல் அளிக்க வேண்டும்.

* தமிழ்நாட்டில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் புதிய ரெயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திடப் போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

* கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்துதல் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை ஒன்றிய அரசு நிறைவு செய்யும் என்று நம்புகிறேன் என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.

# காவிரியிலிருந்து தமிழகத்திற்கு 64,400 கன அடி நீர் திறப்பு

## மேட்டூர் அணை நீர்மட்டம் 69 அடியாக உயர்வு



சென்னை, 21 ஜூலை 2024: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்துவருவதால் தமிழகத்துக்கு வினாடிக்கு 64,400 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணை நீர்வரத்து 71,777 கன அடியாக அதிகரித்துள்ளால், நீர்மட்டம் ஒரே நாளில் 7.6 அடியாக உயர்ந்துள்ளது.

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருவதால், கிருஷ்ணராஜசாகர் (கேஆர்எஸ்), ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மண்டியாவில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு வினாடிக்கு 45 ஆயிரத்து 658 கன அடி நீர் வந்துக்கொண்டிருக்கிறது. இதனால் 124.80 அடி உயரம் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 121.75 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 18 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. அணை முழுவதுமாக நிரம்புவதற்கு இன்னும் 3 அடிகளே இருப்பதால், கரையோர கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கபினி அணைக்கு வினாடிக்கு 53 ஆயிரத்து 253 கன அடி நீர் வந்துக் கொண்டிருக்கிறது. இதனால் 19.52 டிஎம்சி முழு கொள்ளளவைக் கொண்ட கபினி அணையின் நீர்மட்டம் 19.45 டிஎம்சி ஆக உயர்ந்துள்ளது. இதனால் அணையின் பாதுகாப்பை கருதி வினாடிக்கு 45 ஆயிரத்து 658 கன அடி நீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணராஜசாகர், கபினி ஆகிய இரு அணைகளில் இருந்து தமிழகத்துக்கு மொத்தமாக 64,400 கன அடி நீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கும் நீரின் அளவு இன்று காலை விநாடிக்கு 71,777 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 1,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்வரத்து அதிகரித்து இருப்பதால் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று காலை 61.31 அடியில் இருந்த நிலையில் இன்று காலை 68.91 அடியாகவும், நீர் இருப்பு 25.67 டிஎம்சியில் இருந்து 31.77 டிஎம்சியாகவும் உயர்ந்துள்ளது.

ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 7.6 அடியாகவும், நீர் இருப்பு 6.1 டிஎம்சியாகவும் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 70 ஆயிரத்தை கடந்து வந்து கொண்டிப்பதால், நீர்தேக்க பகுதியான, செட்டிப்பட்டி, கோட்டையூர், பண்ணவாடி உள்ளிட்ட பகுதியில் 5 நாட்களாக பரிசல் சவாரி நிறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், அணை நீர் தேக்கப் பகுதியில் நிலத்தை உழுது பயிரிட்டு இருந்த விவசாயிகள் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பயிர்களை அவசர அவசரமாக அறுவடை செய்து வருகின்றனர். ஆனால், பெரும்பாலான தீவன பயிர்கள் நீரில் மூழ்கியதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தொடர்ந்து, நீர்வரத்து அதிகரித்து காணப்படுவதால், நீர்மட்டம் விரைவில் 100 அடியை எட்டும் என நீர்வளத்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




# ஒரு நாளைக்கு 14 மணி நேர வேலை:

## கர்னாடக அரசுக்கு ஐ.டி. நிறுவனங்கள் பரிந்துரை

## "மனிதாபிமானமற்ற செயல்" என ஊழியர்கள் எதிர்ப்பு

சென்னை, 21 ஜூலை 2024: கர்னாடகாவில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஊழியர்களின் பணி நேரத்தை 14 மணி நேரமாக நீட்டிக்கக் கோரி மாநில அரசிடம் கோரிக்கை வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவல் ஐ.டி. ஊழியர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. "மனிதாபிமானமற்ற செயல் இது" எனக் கூறியுள்ள ஐ.டி. ஊழியர்கள், கூடுதல் பணி நேரங்களால் ஏற்படும் உடல்நல பிரச்சினைகள் மற்றும் பணிநீக்கம் குறித்தும் கவலை தெரிவித்துள்ளனர்.

கர்னாடக கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டம், 1961-ஐ திருத்துவது குறித்து அம்மாநில அரசு ஆலோசித்து வருகிறது. இந்த நிலையில் தான், இந்த திருத்தத்தில் ஐ.டி. நிறுவன ஊழியர்களின் பணி நேரத்தை 14 மணி நேரமாக (12 மணி நேரம் + 2 மணி நேரம் கூடுதல் நேரம்) என திருத்தம் செய்ய வேண்டும் என்ற முன்மொழிவை ஐ.டி. நிறுவனங்கள் கொடுத்துள்ளன.

தற்போது, தொழிலாளர் சட்டங்கள் 12 மணி நேரம் (10 மணி நேரம் + 2 மணி நேரம் கூடுதல் நேரம்) என்ற வகையில் வேலை நேரத்தை அனுமதிக்கின்றன. ஆனால், ஐ.டி. துறையின் புதிய முன்மொழிவில், "ஐடி மற்றும் பிபிஓ ஆகிய துறையில் உள்ள பணியாளர்கள் ஒரு நாளைக்கு 12 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்ய வேண்டும் அல்லது வேலை செய்ய அனுமதிக்கப்படலாம் அல்லது மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக 125 மணி நேரத்துக்கு மேல் வேலைநேரம் இருக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

கர்னாடக அரசு இந்த கோரிக்கைகள் தொடர்பாக முதல் ஆலோசனை கூட்டத்தை நடத்தியுள்ளது என்றும், விரைவில் அடுத்தகட்ட முடிவுகள் எடுக்கப்படும் என்றும், அமைச்சரவையில் இது குறித்து விவாதிக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வேலை நேரத்தை நீட்டிக்கும் ஐ.டி. நிறுவனங்களின் முன்மொழிவுக்கு, ஊழியர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளன. கர்னாடக மாநில ஐ.டி. ஊழியர் சங்கமான கேஐடியூ, "இந்த சட்டத் திருத்தம், தற்போது நடைமுறையில் உள்ள மூன்று ஷிப்ட் முறைக்கு பதிலாக இரண்டு ஷிப்ட் என்ற அடிப்படையில் நிறுவனங்களை செயல்பட அனுமதிக்கும். இதனால், மூன்றில் ஒரு பங்கு பணியாளர்கள் வேலையில் இருந்து நீக்கப்படும் அபாயம் உண்டு.

ஐ.டி. துறையில் 45 சதவீத ஊழியர்கள் மனச்சோர்வு போன்ற மனநலப் பிரச்சினைகளையும், 55 சதவீத பேர் உடல் ஆரோக்கிய பாதிப்புகளையும் எதிர்கொள்கின்றனர். இதற்கிடையே, வேலை நேரத்தை மேலும் அதிகரித்தால் இந்த நிலைமை மேலும் மோசமாகும். அரசு ஊழியர்களை மனிதர்களாகப் பார்க்காமல் வெறும் இயந்திரங்களாகப் பார்க்கிறது. தொழிலாளர்களை மனிதர்களாகக் கருத கர்னாடக அரசு தயாராக இல்லை என்பதையே இந்தச் சட்டத் திருத்தம் காட்டுகிறது. மாறாக, கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்தைப் பெருக்கும் எந்திரமாக மட்டுமே ஐ.டி. ஊழியர்களை இந்த அரசு கருதுகிறது" என்று கடுமையாக எதிர்ப்பினை பதிவு செய்துள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் நாளை ஆரம்பம்: சுமூகமாக நடத்த அனைத்துக் கட்சி கூட்டம்



சென்னை, 21 ஜூலை 2024: நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் நாளை தொடங்கவுள்ள நிலையில், மத்திய அரசின் அழைப்பின்பேரில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்தது.

வழக்கமாக நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை இறுதியில் தொடங்கி நடைபெறும். நடப்பாண்டு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றதால், மழைக்கால கூட்டத் தொடர் பட்ஜெட் கூட்டத் தொடராக அறிவிக்கப்பட்டது.

நாளை தொடங்கி ஆகஸ்ட் 12 வரை 19 அமர்வுகளுடன் இக்கூட்டத் தொடர் நடைபெறுகிறது. கடந்த பிப்ரவரியில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்திருந்தார். பா.ஜ.க. 3-வது முறையாக ஆட்சியமைத்த பின்னர் முதன்முறையாக 23 ந்தேதி மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசவுள்ளார். முன்னதாக நாளைய கூட்டத் தொடரின் முதல் நாளில் பொருளாதார ஆய்வறிக்கையை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ய உள்ளார்.

இந்த நிலையில் புதுடெல்லியில் உள்ள நாடாளுமன்ற இல்லத்தின் முக்கிய கமிட்டி அறையில் இன்று காலை 11 மணியளவில் அனைத்து கட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடப்பட்டது.

அதன்படி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு ஆகியோர் தலைமையில் நடந்த கூட்டத்தில் காங்கிரஸ் மக்களவை துணை தலைவர் கவுரவ் கோகாய், மாநிலங்களவை துணை தலைவர் பிரமோத் திவாரி, தி.மு.க.வின் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆனால் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஏற்கனவே அறிவித்தப்படி மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் புறக்கணித்தது. பட்ஜெட்டில் வரலாற்று சிறப்பு மிக்க நடவடிக்கைகள் அறிவிக்கப்படும் என்றும், பெரிய அளவிலான சமூக, பொருளாதார முடிவுகள் இடம் பெறும் என்றும் ஜனாதிபதி உரையில் கூறப்பட்டு இருந்தது.

எனவே, பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் குறித்து எதிர்பார்ப்புகள் எழுந்துள்ளன. குறிப்பாக வருமானவரி விலக்கு உச்சவரம்பு உயர்த்தப்படுமா என மிகுந்த எதிர்ப்பார்ப்பு எழுந்துள்ளது.

இதற்கிடையில் மழைக்கால கூட்டத் தொடரில் 6 புதிய மசோதாக்களை தாக்கல் செய்து, அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அதே வேளையில் இந்த கூட்டத் தொடரில் நீட் வினாத்தாள் கசிவு விவகாரம், ரெயில்வே பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்க எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. ஒடிசா முன்னாள் முதல்-மந்திரி நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜூ ஜனதா தளம், வலுவான எதிர்க்கட்சியாக செயல்படும் என்றும், மாநிலத்தின் நலன் சார்ந்த பிரச்சனைகளை பாராளுமன்றத்தில் ஆக்ரோஷமாக எழுப்புவோம் என்றும் அறிவித்துள்ளது. அதேபோல் பொதுத்துறை வங்கிகளில் 51 சதவீதத்திற்கும் குறைவான பங்குகளை குறைக்கும் எந்தவொரு அரசாங்க நடவடிக்கையையும் எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கும் என காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

# கடின உழைப்பு, ஒழுக்கத்துடன் இளைஞர்கள் செயல்பட்டால் வாழ்க்கையில் முன்னேறலாம்: வெங்கையா நாயுடு அறிவுரை



சென்னை, 21 ஜூலை 2024: 'வாழ்வில் ஒழுக்கம் மற்றும் குறிக்கோளுடன் கடினமாக உழைத்தால் இளைஞர்களுக்கு வெற்றி நிச்சயம்' என்று முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசினார்.

இந்தியாவின் 13வது துணை ஜனாதிபதியாக பதவி வகித்த வெங்கையா நாயுடுவின் 75வது பிறந்தநாள் மற்றும் 50 ஆண்டுகள் அவர் நாட்டுக்கு சேவை ஆற்றியதை கொண்டாடும் விதமாக, சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில், சந்தித்து வாழ்த்து கூறும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் வெங்கையா நாயுடுவின் மகள் தீபா தலைமை தாங்கினார்.

விழாவில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட வெங்கையா நாயுடுவின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகத்தை வெங்கையா நாயுடு வழங்கினார்.

அதன் பின்னர், வெங்கையா நாயுடு பேசும் போது, 'சென்னைக்கும் எனக்கும் எப்போதும் தனிப்பட்ட பந்தம் உள்ளது. இதற்கு காரணம், தமிழகத்தின் கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை நெறிமுறைகள் எனக்கு மிகவும் பிடிக்கும், அத்துடன் மிகவும் மூத்த மொழி தமிழ். அதற்கு உரிய மதிப்பளித்து வருகிறேன்.

ஆரம்ப காலத்தில் இளம் வயதில் மாணவர் தலைவராக எனது அரசியல் வாழ்க்கையை தொடங்கினேன். என்னுடைய இத்தகைய வளர்ச்சிக்கு முக்கிய காரணம் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் தான். என்னுடைய வாழ்க்கையில் 14 வயதில் அந்த இயக்கத்தில் இணைந்ததால் தான் நான் தலைமைத்துவ பண்பை கற்றுக்கொண்டேன்.

ஆரம்ப காலத்தில் நெல்லூரில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் வாஜ்பாய் மேடையில் பேசும்போது, என்னை ஜனாதிபதியாக வருவார் என கூறினார். அவர் கூறியது போலவே நடந்தது. எனது தாயின் ஆசை போலவே வக்கீலாக பணியாற்றினேன். அதற்கு பிறகு கட்சியில் இணைந்தேன். கட்சி என்னை வழிநடத்தி இத்தகைய இடத்திற்கு கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது.

வாழ்வில் ஒழுக்கம், குறிக்கோள், கடின உழைப்பு ஆகியவற்றை அமைத்து செயல்பட்டால் வெற்றி என்பது நிச்சயம் என்பது என் வாழ்வில் நான் கற்றுக்கொண்ட பாடமாகும்.

இன்றைய தலைமுறையினரும் அதனை பின்பற்றி நடந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியும். 5-வது உலக பொருளாதார நாடாக நம்முடைய நாடு உள்ளது. தொடர்ந்து உழைத்தால் முதல் இடத்திற்கு இந்தியா கண்டிப்பாக வரும். எந்த கட்சியாக இருந்தாலும் நாடாளுமன்றத்தில் தரமான விவாதங்களில் ஈடுபட வேண்டும்' என்றார்.

நிகழ்ச்சியில் துக்ளக் ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி, ஜி.கே.வாசன் எம்.பி., நயினார் நகேந்திரன் எம்.எல்.ஏ., தெலுங்கானா மாநில முன்னாள் கவர்னர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், பாரதீய ஜனதா மூத்த தலைவர் எச்.ராஜா, அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஜெயகுமார், முன்னாள் எம்.பி. பாரிவேந்தர், தொழில் அதிபர் நல்லி குப்புசாமி, ஆர்.எம்.கே. என்ஜினீயரிங் கல்லூரி நிறுவனர் ஆர்.எஸ்.முனிரத்தினம், தே.மு.தி.க. இளைஞர் அணி செயலாளர் சுதீஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சென்னையில் புதிய எக்ஸ்பீரியன்ஸ் சென்டரை தொடங்கியிருக்கும் ஜிஎம் மாடுலர்




சென்னை, 21 ஜூலை 2024: மின்சாதனங்கள் தொழில்துறையில் பிரபலமாக திகழும் பிராண்டான ஜிஎம் மாடுலர், சென்னை மாநகரில் 4,500 சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ள அதன் புதிய எக்ஸ்பீரியன்ஸ் சென்டர் தொடங்கப்பட்டிருப்பதை பெருமையுடன் அறிவிக்கிறது. வாடிக்கையாளரின் வசதி மற்றும் நலனை கருத்தில் கொண்டிருக்கும் இந்நடவடிக்கை, இப்பிராந்தியத்தில் ஜிஎம் மாடுலர் நிறுவனத்தின் விரிவாக்கத்தை குறிக்கும் முக்கிய மைல்கல் நிகழ்வாக அமைந்தது. தனது தயாரிப்புகளை நுகர்வோர்கள் நேரில் பார்த்து அனுபவ ரீதியாக அவற்றை வாங்கும் வாய்ப்பை உருவாக்குவதே இதன் நோக்கம். சென்னையின் மையப்பகுதியான மவுண்ட் ரோடில் பிரெஸ்டிஜ் சக்ரியா மெட்ரோபொலிடன் வளாகத்தில் அமைந்திருக்கும் இந்த புதிய எக்ஸ்பீரியன்ஸ் சென்டரை ஜிஎம் மாடுலரின் பிராண்டு தூதரும் மற்றும் பிரபல பாலிவுட் நடிகருமான திரு. சுனில் ஷெட்டி திறந்து வைத்தார். நவீன அழகியல் அம்சங்களுடனும் மற்றும் இன்டராக்டிவ் டிஸ்ப்ளே சாதனங்கள் வசதியுடனும் வடிவமைக்கப்பட்டுள்ள இம்மையம் ஒரு வியக்க வைக்கும் அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது; ஜிஎம் மாடுலர் நிறுவனத்தின் பிரபலமான மாடுலர் ஸ்விட்சுகள், இல்லங்களுக்கான ஆட்டோமேஷன் சாதனங்கள், அலங்கார விளக்குகள், மின்விசிறி மற்றும் வீட்டு உபயோக சாதனங்கள் உட்பட இதன் சமீபத்திய தயாரிப்புகள் அனைத்தையும் வாடிக்கையாளர்கள் நேரில் பார்த்து ஆராய்ந்து தேர்வு செய்வதற்கான வாய்ப்பை இந்த எக்ஸ்பீரியன்ஸ் மையம் வழங்குகிறது. ஜிஎம் மாடுலர் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் & நிர்வாக இயக்குநர் திரு. ஜெயந்த் ஜெயின் பேசுகையில், “சென்னை மாநகரில் எமது புதிய எக்ஸ்பீரியன்ஸ் சென்டரை திறந்து வைப்பதில் நாங்கள் அதிக உற்சாகம் கொள்கிறோம். ஜிஎம்-ஐ பொறுத்தவரை சென்னை ஒரு மிக முக்கிய சந்தையாகும். இங்கு எமது தயாரிப்புகளுக்கு தேவை அதிகரித்து வரும் நிலையில் எமது தயாரிப்புகள் அனைத்தையும் கண்டு, ஆராய்ந்து தேர்வு செய்வதற்கு ஒரு முழுமையான வாய்ப்பின் மூலம் ஒரு இனிய அனுபவத்தை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்க நாங்கள் விரும்பினோம். இந்த புதிய மையம் எமது சமீபத்திய புத்தாக்க தயாரிப்புகளை நேர்த்தியாக காட்சிப்படுத்துவதுடன் எமது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ற உயர்தர தீர்வுகளை வழங்கும் எமது பொறுப்புறுதிக்கு ஒரு வலுவான சான்றாகவும் திகழ்கிறது. எமது செயல்நடவடிக்கைகளையும் மற்றும் புத்தாக்கத்தையும் நாங்கள் தொடர்ந்து விரிவாக்கம் செய்து வரும் நிலையில், இப்புதிய மையம் தொடங்கப்பட்டிருப்பது ஜிஎம்-ன் பயணத்தில் ஒரு பெருமைமிகு தருணமாகும்” என்று கூறினார்.

பாலிவுட் நடிகர் திரு. சுனில் ஷெட்டி கலந்து கொண்டு சிறப்பித்த இத்திறப்பு விழா நிகழ்வில் தொழில்துறையின் முக்கிய தலைவர்கள் மதிப்புமிக்க விருந்தினர்கள் மற்றும் ஊடகத்துறையின் உறுப்பினர்கள் திரளாக பங்கேற்றனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்கள், இந்த எக்ஸ்பீரியன்ஸ் சென்டரை சுற்றி பார்க்கவும் ஜிஎம்-ன் தயாரிப்புகளை நேரில் பார்த்து ஆராயவும் மற்றும் மின்சாதன தொழில்துறையில் சமீபத்திய போக்குகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து மதிப்புமிக்க கண்ணோட்டங்களை பெறவும் ஒரு சிறந்த வாய்ப்பை பெற்றார்கள். ஜிஎம் மாடுலர் நிறுவனத்தின் புத்தாக்க அணுகுமுறை மற்றும் அதன் தயாரிப்புகளில் உயர்தரம் குறித்து தனது பாராட்டையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திய திரு. சுனில் ஷெட்டி, “ஜிஎம் மாடுலர் பிராண்டுடன் நீண்ட காலமாக இணைந்து செயல்படுவது திருப்தியளிக்கும் ஒரு சிறப்பான அனுபவமாக இருந்து வருகிறது. இந்த பிராண்டு வளர்ந்து வருவதையும், தனது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக சேவையாற்ற தொடர்ந்து புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடுவதையும் காண்பது உண்மையிலேயே உத்வேகம் அளிக்கிறது உயர்நேர்த்தி மற்றும் புத்தாக்கம் மீது ஜிஎம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பிற்கு இந்த புதிய எக்ஸ்பீரியன்ஸ் சென்டர் ஒரு நல்ல சான்றாகும். இத்தகைய உயர்தரங்களை நிறுவியிருக்கிற மற்றும் இத்தொழில்துறை மட்டுமின்றி உலகெங்கிலும் ஆழமான தாக்கத்தை உருவாக்கியிருக்கிற ஒரு 'மேக் இன் இந்தியா' பிராண்டை காண்பது உண்மையிலேயே பெருமிதமளிக்கும் தருணமாகும்” என்று குறிப்பிட்டார்.

2002-ம் ஆண்டில் நிறுவப்பட்ட ஜிஎம், இல்லங்களுக்கான மின்சாதன தீர்வுகள் பிரிவில் எப்போதும் முன்னணி வகித்து வந்திருக்கிறது; சந்தையின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை மிஞ்சி திருப்தியளிப்பதில் சாதித்திருக்கிறது. இந்தியாவில் சுவிட்சுகளுக்கான மிகப்பெரிய தயாரிப்பாளராக திகழும் ஜிஎம், பல புரட்சிகரமான தயாரிப்புகளை சந்தையில் அறிமுகம் செய்த முதல் நிறுவனம் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறது. புதிய தலைமுறை சுவிட்சுகள் இல்லங்களுக்கான ஆட்டோமேஷன் சாதனங்கள், புளூடூத் மியூசிக் பிளேயர்கள், எல்இடி ஒளி விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவை இதன் தயாரிப்புகளது தொகுப்பில் சிலவாகும். இதன் புத்தாக்க தயாரிப்புகள், இந்நிறுவனத்தின் வலுவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு துறையின் திறன்மிக்க செயல்பாடுகளின் விளைவாகும். அத்துடன் அனுபவமும், அர்ப்பணிப்புமிக்க வடிவமைப்பு குழுவினரின் பங்களிப்பு இந்த புத்தாக்கங்களுக்கு பெரிதும் துணை நிற்கின்றன. இந்நிறுவனத்தின் மிக நவீன உற்பத்தி தொழிலகம், உயர்தரத்திலான தயாரிப்புகளை தயாரிக்கும் திறன் கொண்ட உயர்தர எந்திரங்களுடன் 2.5 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட வளாகத்தில் அமைந்திருக்கிறது.

**அதிக தகவலை அறிய கீழ்கண்ட முகவரியில் அமைந்துள்ள புதிய எக்ஸ்பீரியன்ஸ் சென்டருக்கு வருகை தரவும்: ஜிஎம் எக்ஸ்பீரியன்ஸ் சென்டர், பிளாக் எண். 4 & 5, தரைதளம், பிரெஸ்டிஜி சக்ரியா மெட்ரோபொலிடன், மவுண்ட் ரோடு, சென்னை.**

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## சென்னையில் நடைபெற்ற அமெரிக்காவின் 248வது தேசிய நாள் விழாவிற்கு தலைமை வகித்த இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டி, சிறப்பான அமெரிக்கா-இந்தியா விண்வெளி கூட்டு செயல்பாடுகளுக்கு பாராட்டு

சென்னை, 21 ஜூலை 2024: இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் எரிக் கார்செட்டி, சென்னையில் வியாழக்கிழமை (ஜூலை 18, 2024) நடைபெற்ற 248வது அமெரிக்க தேசிய நாள் (சுதந்திர தினம்) விழாவிற்கு தலைமை வகித்தார். விண்வெளி ஆய்வு மற்றும் ஸ்டெம் (ஸ்டெம்) எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மற்றும் கணிதம் ஆகிய துறைகளில் தொடர்ந்து வலுவடைந்து வரும் அமெரிக்க-இந்திய கூட்டுறவை அவர் பாராட்டினார். ஜூலை 4, 1776 அன்று செய்யப்பட்ட சுதந்திரப் பிரகடனத்தை அமெரிக்க தேசிய தினம் குறிக்கிறது.




சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய தூதர் கார்செட்டி, விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் ஸ்டெம் கல்வியில் இரு நாடுகளின் கூட்டு முயற்சிகளை எடுத்துரைத்ததோடு, அமெரிக்கா மற்றும் இந்தியா இடையிலான வலுவான நட்பை அடிக்கோடிட்டுக் காட்டினார். இந்த முயற்சிகளை முன்னெடுப்பதில் தென்னிந்தியாவின் முக்கிய பங்கை அவர் பாராட்டினார். நிஸார் (நாசா-இஸ்ரோ ரேடார்) பணியில் அமெரிக்க-இந்தியா விண்வெளி ஒத்துழைப்பை அவர் குறிப்பிட்டார். சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அமெரிக்க ராக்கெட்டில் இந்தியரை அனுப்புவது குறித்தும் அவர் பேசினார். "விண்வெளி நமது குறுகிய அடையாளங்களை அகற்றி, எல்லைகள் மற்றும் பெருங்கடல்களை தாண்டி நம்மை இணைக்கிறது. இந்தோ-பசிபிக் பகுதியில் சிறப்பான உறவை இது உருவாக்குவதோடு, ஒரே மனிதக் குடும்பமாக நம்மை அடையாளப்படுத்துகிறது," என்று அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சார்பில் நிகழ்ச்சியில் பங்கேற்ற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, "தகவல் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பின் முக்கிய பாலமாக சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகம் செயல்படுகிறது. உலகளாவிய சிந்தனைகள், ஆராய்ச்சி மற்றும் சிறந்த நடைமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அமெரிக்க துணைத் தூதரகத்தின் ஒத்துழைப்பு நமது கல்வி முறையை மேம்படுத்துகிறது. அமெரிக்க வரலாற்றின் மைல்கல்லை நினைவுகூரும் வேளையில், தமிழ்நாடு மற்றும் அமெரிக்கா இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கான நமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவோம். நமது இளைஞர்கள் மற்றும் சமுதாயங்களின் வளமான எதிர்காலத்திற்காக அமெரிக்க துணைத் தூதரகத்தின் சேவைகள் மற்றும் நிபுணத்துவத்தை பயன்படுத்தி கூட்டுறவு மற்றும் ஒத்துழைப்பின் உணர்வைத் தொடர்ந்து தழைக்க செய்வோம்," என்றார்.

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதர் கிறிஸ் ஹோட்ஜஸ், கௌரவ விருந்தினர் நடிகர் கமல் ஹாசன் ஆகியோரும் கலந்து கொண்டு, குறிப்பாக விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் ஸ்டெம் கல்வியை மேம்படுத்துவதில் அமெரிக்க-இந்திய உறவுகளின் பன்முகத்தன்மையை பாராட்டினர். கமல்ஹாசன் தனது உரையில், விண்வெளியை கருப்பொருளாக கொண்டு தேசிய தின நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்ததற்கு வாழ்த்தினார். சமீபத்திய விண்வெளி பயணங்களில் பெண்களின் பங்கு குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இளம் பாடகி ஐனா பதியத் அமெரிக்க தேசிய கீதத்தையும், பாடகி பவித்ரா சாரி இந்திய தேசிய கீதத்தையும் நிகழ்ச்சியில் பாடினர்.

## மோடி ஆட்சியில் நீட், யூ.பி.எஸ்.சி, குடிமைப் பணி தேர்வுகளிலும் மோசடி: செல்வப்பெருந்தகை அறிக்கை

சென்னை, 21 ஜூலை 2024: மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில் அனைத்து தேர்வுகளிலும் குளறுபடிகளும் மோசடிகளும் நடைபெற்றுள்ளது அம்பலமாகியுள்ளது என செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

உச்சநீதிமன்ற ஆணையின்படி நாடு முழுவதும் நடந்த நீட் முடிவுகள் நேற்று வெளியானது. இதில் பல்வேறு குளறுபடிகள் அம்பலமாகியுள்ளன. குறிப்பாக தமிழ்நாட்டில் எழுதியவர்களின் புள்ளிவிபரங்களில் குளறுபடி ஏற்பட்டுள்ளதாக கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர். நாடு முழுவதும் நடந்த தேர்வில் 23 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தேர்வு எழுதி அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 4 ம் தேதி நீட் முடிவு வெளியான அறிவிப்பில் 1 லட்சத்து 52 ஆயிரத்து 920 பேர் தமிழ்நாட்டில் தேர்வு எழுதியதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் நேற்று நகரங்கள், மையங்கள் வாரியாக வெளியான மதிப்பெண் பட்டியலில் 744 பேர் கூடுதலாக எழுதியிருப்பதாக இருந்த தகவல் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு மையங்களில் வெளியான முடிவுகள் ஏற்கனவே வெளியான முடிவுகளோடு ஒத்துப்போகாத வகையில் இருப்பது குறித்து உச்சநீதிமன்றத்தில் நடைபெறவுள்ள திங்கட்கிழமை விசாரணையில் உச்சநீதிமன்றம் என்ன முடிவு எடுக்கப்போகிறது என்று தெரியவில்லை.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு நெருக்கமான யு.பி.எஸ்.சி. தலைவர் குஜராத்தை சேர்ந்த மனோஜ் சோனி ராஜினாமா செய்திருப்பது மிகுந்த அதிர்ச்சியை தருகிறது. இன்னும் ஐந்தாண்டுகள் பதவி காலம் உள்ள நிலையில் விலகியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. யு.பி.எஸ்.சி.யில் நடந்திருக்கும் பல ஊழல்கள் தேசிய அளவில் கவனம் பெற்றுள்ளது. ஏராளமான ஊழல்களும், ராஜினாமாவிற்கும் ஏதாவது தொடர்புள்ளதா எனப்து குறித்து பிரதமர் மோடி விளக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் யு.பி.எஸ்.சி. தேர்வுக்கு 8 லட்சம் முதல் 13 லட்சம் பேர் வரை விண்ணப்பிக்கின்றனர். இதில் வெற்றி பெற்று நேர்முக தேர்வுக்கு அழைக்கப்படுபவர்கள் 2000 முதல் 3000 பேர் மட்டும் தான். அதில் வெற்றி பெற்று பணியமர்த்தப்படுபவர்கள் சுமார் 1000 பேர் மட்டுமே.

தேசிய தேர்வு முகமை நடத்திய நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட மோசடிகளால் மத்திய புலனாய்வுத்துறை விசாரணை நடந்து வருகிறது. உச்சநீதிமன்றத்தில் வழக்கும் நடந்துவருகிறது. அதேபோல மத்திய பணியாளர் தேர்வாணையத்தில் யு.பி.எஸ்.சி.யிலும் ஊழல்கள் வெளியாகி அதன் தலைவர் ராஜினாமா செய்திருக்கிறார்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற குடிமைப்பணி இடங்களை நிரப்புவதற்கான ஒன்றிய பணியாளர் தேர்வாணையத்திலும் பல மோசடிகள் நடந்திருப்பதற்கான ஆதாரங்கள் வெளியாகிகொண்டிருக்கின்றன. பிரதமர் மோடி ஆட்சியில் நீட் தேர்வினால் மருத்துவத்துறை சீரழிந்து வருகிறது. யு.பி.எஸ்.சி. தேர்வினால் குடிமைப்பணி தேர்வுகளும் ஊழலுக்கு இரையாகியுள்ளன. இதன் மூலம் ஏற்படுகிற விளைவுகளினால் இளைய சமுதாயத்தினரின் எதிர்காலமே கேள்விக்குறியாகியிருக்கிறது.

சென்னையில் 267 கிலோ தங்கம் கடத்திய வழக்கில் பா.ஜ.க. பிரமுகர் உட்பட 6 பேருக்கு சுங்கத்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பியுள்ளனர். இதை தொடர்ந்து பா.ஜ.க. நிர்வாகியான ப்ரித்வி என்பவர் அண்ணாமலைக்கு மிக மிக நெருக்கமானவர். இவர் இந்த தங்க கடத்தலில் பின்னணியாக இருந்து செயல்பட்டிருக்கிறார்.

சமீப காலமாக பல்வேறு கிரிமினல் வழக்குகளில் பா.ஜ.க.வை சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது செய்திகளாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதன் மூலம் தமிழக பா.ஜ.க. சமூக விரோதிகளின் புகலிடம் என்பது உறுதிப்பட்டு வருகிறது. குறிப்பாக ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் அண்ணா தி.மு.க. ஒன்றிய கவுன்சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல பா.ஜ.க. மகளிர் பிரிவு தலைவராக இருந்த அஞ்சலை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். இத்தகைய செய்திகளெல்லாம் நான் பா.ஜ.க. மீது கூறிய குற்றச்சாட்டுகளை உறுதி செய்து வருகிறது.

பொதுவாக கடந்த 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியை விட மூன்றாவது முறை ஆட்சிக்கு வந்துள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் மாற்றங்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடைபெறுகிற நிகழ்வுகள் கடந்த கால பா.ஜ.க. ஆட்சியை விட மோசமாக நடைபெற்று வருவதை தான் தேசிய தேர்வு முகமை மற்றும் யு.பி,எஸ்.சி குளறுபடிகள் படம் பிடித்து காட்டுகின்றன.

இவ்வாறு கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பூமித்ராவுடன் கூட்டாண்மையை மேற்கொள்ளும் சர்வேஸ்வர் ஃபுட்ஸ்! நிலைப்புத்தன்மையுள்ள விவசாய நடைமுறைகளை ஊக்குவிக்கவும், விவசாயிகள் திறனதிகாரம் பெறச்செய்யவும் இது உதவும்

சென்னை, 21 ஜூலை 2024: சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட், பிராண்டட் மற்றும் பிராண்டட் அல்லாத பாசுமதி மற்றும் பாசுமதி அல்லாத அரிசி மற்றும் பிற பொருட்களை உற்பத்தி, வர்த்தகம், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒரு பெருநிறுவனமாகும். நிலைப்புத்தன்மையுள்ள விவசாய நடைமுறைகளை புரட்சிகரமாக மாற்றுவதற்காக பூமித்ரா ஓ2சி டெக் இந்தியா என்ற நிறுவனத்துடன் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தத்தை இந்நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது. சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் - க்காக கார்பன் கிரெடிட்களை விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிப்பது, மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மற்றும் வருமானம் ஈட்டுவது ஆகியவையும் இந்த முக்கியமான ஒப்பந்தத்தின் நோக்கமாகும். மேலும், சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் உடன் தொடர்புடைய, 45,000 ஏக்கர் பரப்பளவில் விவசாயத்தை மேற்கொள்ளும் 17,000+ விவசாயிகளுக்கு பயனளிப்பதாக இந்த கூட்டாண்மை ஒப்பந்தம் இருக்கும். நிலைப்புத்தன்மையுள்ள விவசாயம் என்ற இலக்கை நோக்கிய குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இக்கூட்டாண்மை ஒப்பந்தம் அமைகிறது. மண் கார்பன் சந்தையில் முன்னணியில் இருக்கும் பூமித்ரா, சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் தொடர்புடைய விவசாயிகளுக்கு மீளுருவாக்கம் செய்யும் விவசாய நடைமுறைகளை மேற்கொள்ள உதவுவதற்காக அதன் நிபுணத்துவத்தை வழங்கும். நிலைப்புத்தன்மையுள்ள இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், கார்பன் அடிச்சுவட்டைக் குறைத்தல் மற்றும் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயை ஈட்டும் திறனை வழங்குதல் ஆகியவை இந்த முன்னெடுப்பு திட்டத்தின் நோக்கமாகும். விவசாயிகளும் மற்றும் சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் - ம், ஜி எச் ஜி குறைப்பு முயற்சிகளால் உருவாக்கப்படுகின்ற கார்பன் கிரெடிட்களை விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருவாயை பெறுவார்கள். சுற்றுச்சூழல் நிலைப்புத்தன்மை, விவசாயிகளின் பொருளாதார மேம்பாடு மற்றும் இந்தியாவில் மீளுருவாக்கம் செய்யும் விவசாய நடைமுறைகளை ஊக்குவிப்பது ஆகிய குறிக்கோள்கள் மீது சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் மற்றும் பூமித்ரா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அர்ப்பணிப்பையும், பொறுப்புறுதியையும் இந்த கூட்டுவகிப்பு நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

பூமித்ரா என்பது, சர்வதேச அளவில் இயங்கும் ஒரு முன்னணி மண் கார்பன் சந்தையாகும். செயற்கை நுண்ணறிவு (ஏ ஐ) மற்றும் தொலைதூர உணர்திறன் தொழில்நுட்பத்தால் செயல்படுத்தப்படும் இத்தளம், விவசாய நடைமுறைகளை மேம்படுத்தவும், புதிய வழிமுறைகளின் மூலம் வருவாய் ஈட்டவும் மற்றும் செழிப்பானதாக இந்த பூமி கிரகத்தை உருவாக்கவும் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் திறனதிகாரம் பெறுவதை பூமித்ரா ஏதுவாக்குகிறது. கார்பன் கிரெடிட்களை உலகெங்கிலும் உள்ள பெருநிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு பூமித்ரா விற்பனை செய்கிறது; இதன் வழியாக, அவர்களின் நிலைப்புத்தன்மை இலக்குகளை எட்டுவதற்கு அவர்களுக்கு உதவுகிறது. விற்கப்படும் ஒவ்வொரு கார்பன் கிரெடிட்டிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தின் பெரும்பகுதி விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. இதனால் அவர்கள் தங்கள் மீதும் மற்றும் தங்களது சமூகங்களிலும் மறுமுதலீடு செய்ய இது வகை செய்கிறது. 5 மில்லியன் + ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை தனது மேலாண்மையின் கீழ் கொண்டிருக்கும் பூமித்ரா, விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுடன் இணைந்து ஜிகாடன் அளவில் கார்பன் அகற்றுதல் நடவடிக்கையை துரிதப்படுத்துகிறது; அதேசமயம் வேளாண் விளைபொருட்களை குறைவான செலவில் அதிகம் உற்பத்திசெய்ய அவர்களுக்கு உதவுகிறது.

## டீன்ஸ் நன்றி அறிவிப்பு விழாவில் குழந்தைகளுக்கு பார்த்திபன் அன்பு முத்தமழை



சென்னை, 21 ஜூலை 2024: அன்பு இல்லம் மற்றும் ஹோப் பப்ளிக் சேரிடபிள் டிரஸ்ட் குழந்தைகளுடன் டீன்ஸ் படத்தின் நன்றி விழா கொண்டாடிய இயக்குனர் ஆர்.பார்த்திபன். த்ரில்லர், ஹாரர் மற்றும் சைன்ஸ் ஃபிக்ஷன் என்ற வித்தியாசமான கதை, திரைக்கதை, வசனம் எழுதி பதிமூன்று குழந்தைகள் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்து உலகமெங்கும் கடந்த 12 -ம் தேதி வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் இரண்டே நாட்களில் அதிக திரையரங்கில் அதிக காட்சிகளுடன் உலகமெங்கும் வெற்றி நடை போடுகிறது. டி. இமானின் இசை, கேவ்மிக் ஆரியின் ஒளிப்பதிவு என யாவும் டீன்ஸ்ஸை ரசிகர்களின் மத்தியில் வரவேற்பை பெற வைத்தது குறிப்பாக குழந்தைகள் பெற்றோர்களுடன் திரையரங்கிற்கு வந்து டீன்ஸை பெரும் ற்றி பெறச் செய்தனர். இத்திரைப்படத்தில் பார்த்திபனின் மகள் கீர்த்தனா பார்த்திபன் கிரியேட்டிவ் தயாரிப்பாளராக பெரும் பங்களித்திருக்கிறார்.

இதனை முன்னிட்டு அன்பு இல்லத்தை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுடன் சென்னை காசி டாக்கீஸ் திரையரங்கில் இசையமைப்பாளர் டி. இமான், இயக்குனர் பிரபு சாலமனுடன் -வுடன் படம் பார்த்து படத்தில் நடித்த பதிமூன்று குழந்தைகளுடன் கேக் வெட்டி படக்குழுவினர் கொண்டாடினர்கள். நீண்ட நாட்களுக்கு பிறகு குழந்தைகளுக்காக குடும்பத்தினருடன் ரசிக்கும் படி படம் எடுத்த இயக்குனர் பார்த்திபனுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

படம் கதை அம்சத்தோடு டெக்னிகல் -ளாகவும் பிரமிக்க வைக்கிறது என இயக்குனர் பிரபு சாலமன் தெரிவித்தார். நல்ல கதையம்சத்தோடு எந்த காலகட்டத்தில் வெளியானாலும் மக்கள் கொண்டாடுவார்கள் என்பதற்கு டீன்ஸ் படம் ஒரு உதாரணம் என நடிகர், இயக்குனர் பார்த்திபன் நெகிழ்ந்தார். படத்தில் பணியாற்றிய பதிமூன்று குழந்தைகளுக்கு அவர்கள் படத்தில் கொடுத்த ஒத்துழைப்புகளுக்காகவும், சிறந்த நடிப்பிற்க்காகவும் போனஸ் - ஆக அன்பு முத்தங்களை பரிசாக தந்தார். பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களுக்கும், ரசிகர்களுக்கும் தன்னுடன் இணைந்து பணியாற்றிய யாவருக்கும் பார்த்திபன் தனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்தார்.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
உள்ளது உள்ளபடி
ஞாயிற்றுக்கிழமை,
ஜூலை 21, 2024

## சாம்சங் கேலக்சி வாட்ச் 7,கேலக்சி வாட்ச் அல்ட்ரா, பட்ஸ் 3 சீரிஸ் ஆகியவற்றை இந்தியாவில் அறிமுகப்படுத்துகிறது; அற்புதமான சலுகைகளுக்கு இப்போதே முன்பதிவு செய்யுங்கள்




கோயம்புத்தூர், 21 ஜூலை 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் புதிய கேலக்சி பட்ஸ் 3, கேலக்சி பட்ஸ் 3 ப்ரோ கேலக்ஸி வாட்ச்7 மற்றும் கேலக்ஸி வாட்ச் அல்ட்ரா ஸ்மார்ட்வாட்ச்களை முன்கூட்டிய ஆர்டர் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அற்புதமான சலுகைகளை அறிவித்துள்ளது. கேலக்சி வாட்ச் 7மற்றும் கேலக்சி வாட்ச் அல்ட்ரா ஆகியவை கேலக்சி ஏஐ இன் ஆற்றலை, அனைவருக்கும் இறுதி முதல் இறுதி வரை ஆரோக்கிய அனுபவங்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட அணியக்கூடியவைகள் மூலம் பலருக்கு விரிவுபடுத்துகின்றன.

கேலக்சி வாட்ச் அல்ட்ரா - கேலக்சி வாட்ச் போர்ட்ஃபோலியோவிற்கு புதிய மற்றும் மிகவும் சக்திவாய்ந்த கூடுதலாகும் - இறுதி நுண்ணறிவு மற்றும் திறன்களுடன் அடுத்த நிலை சாதனைகளுக்கு மேம்பட்ட உடற்பயிற்சி அனுபவங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

வாட்ச் அல்ட்ரா பாதுகாப்பு மற்றும் காட்சி முழுமையை மேம்படுத்த புதிய குஷன் வடிவமைப்பைப் பெறுகிறது. இது டைட்டானியம் கிரேடு 4 ஃபிரேம் மற்றும் 10ஏடிஎம் நீர் எதிர்ப்புடன் வருகிறது, மேலும் கடலில் நீந்துவது, தீவிர சூழல்களில் சைக்கிள் ஓட்டுவது போன்ற மேம்பட்ட உடற்பயிற்சி அனுபவங்களுக்காக அதிக உயரத்தில் இயங்கக்கூடியது.

புதிதாக சேர்க்கப்பட்ட விரைவு பட்டன் மூலம், நீங்கள் உடனடியாக உடற்பயிற்சிகளைத் தொடங்கலாம் மற்றும் கட்டுப்படுத்தலாம் மற்றும் உங்கள் தேவைகளுக்கு ஏற்ப மற்ற செயல்பாடுகளை வரைபடமாக்கலாம். கூடுதலாக, பாதுகாப்புக்காக நீங்கள் அவசர சைரனை இயக்கலாம். வொர்க்அவுட்டிற்குப் பிறகு, கேலக்ஸி வாட்ச் அல்ட்ராவுக்கான பிரத்யேக வாட்ச் முகங்களுடன் புள்ளிவிவரங்களை ஒரே பார்வையில் சரிபார்க்கவும். 3,000 நிட்ஸ் இன் உச்ச பிரகாசத்துடன், கேலக்சி வாட்ச் அல்ட்ரா பிரகாசமான சூரிய ஒளியில் கூட படிக்கக்கூடிய தன்மையை உறுதி செய்கிறது. நீண்ட சாகசங்களின் போது மன அமைதிக்காக, கேலக்சி வாட்ச் அல்ட்ரா ஆனது கேலக்சி வாட்ச் வரிசையில் மிக நீளமான பேட்டரி ஆயுளைக் கொண்டுள்ளது, இது 100 மணிநேரம் வரை ஆற்றல் சேமிப்பையும், 48 மணிநேரம் உடற்பயிற்சி சக்தி சேமிப்பையும் வழங்குகிறது.

கேலக்ஸி வாட்ச் அல்ட்ரா 47மிமீ அளவில் டைட்டானியம் கிரே, டைட்டானியம் ஒயிட் மற்றும் டைட்டானியம் சில்வர் ஆகிய நிறங்களில் கிடைக்கும். கேலக்சி வாட்ச் அல்ட்ரா 3என் எம் சிப்செட் உடன் வருகிறது.

கேலக்சி வாட்ச் 7மூலம், நீங்கள் 100 உடற்பயிற்சிகளையும் துல்லியமாக கண்காணிக்கலாம் மற்றும் உங்கள் இலக்குகளை அடைய பல்வேறு பயிற்சிகளை வொர்க்அவுட் ரொட்டினுடன் இணைப்பதன் மூலம் நடைமுறைகளை உருவாக்கலாம். உங்கள் உடலைப் பற்றிய விரிவான புரிதலுக்காக, உடல் அமைப்புடன் முழுமையான உடல் மற்றும் உடற்பயிற்சி ஸ்னாப்ஷாட்டைப் பெறுங்கள். புதிய மேம்பட்ட கேலக்சி ஏஐ அல்காரிதம் உறக்கம் பகுப்பாய்வு மற்றும் எலக்ட்ரோ கார்டியோகிராம் (ஈ சி ஜி) மற்றும் இரத்த அழுத்தம் (பி பி) கண்காணிப்பு மூலம் உங்கள் இதய ஆரோக்கியத்தைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறவும்.

கேலக்சி வாட்ச் 7, வாட்ச் அல்ட்ரா, பட்ஸ் 3 சீரிஸ் க்கான முன் பதிவு சலுகைகள் கேலக்சி வாட்ச் 7ஐ முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ரூபாய் 8000 மதிப்புள்ள மல்டி-பேங்க் கேஷ்பேக் அல்லது ரூபாய் 8000 மதிப்புள்ள மேம்படுத்தப்பட்ட போனஸ் கிடைக்கும், அதே நேரத்தில் கேலக்சி வாட்ச் அல்ட்ரா ஐ முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்கள் 10000 ரூபாய் மதிப்புள்ள மல்டி-பேங்க் கேஷ்பேக்கைப் பெறுவார்கள் அல்லது ரூபாய் 10000 மதிப்புள்ள போனஸை மேம்படுத்துவார்கள்.

## சாம்சங் இந்தியா, ‘சால்வ் பார் டுமாரோ‘ போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் 100 குழுக்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது




கோயம்புத்தூர், 21 ஜூலை 2024: ஜூலை 5, 2024: இந்தியாவின் முன்னணி நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், நாட்டில் ஒரு புதுமைச் சூழல் அமைப்பை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட, அதன் முதன்மை சி எஸ் ஆர் முயற்சி 'சால்வ் பார் டுமாரோ' போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் 100 குழுக்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த தேர்வுப்பட்டியலில் 'ஸ்கூல்' மற்றும் 'யூத்' டிராக்கில் தலா 50 அணிகள் இடம்பெற்றுள்ளன. அவை, தற்போது தேசிய கல்வி மற்றும் புத்தாக்கப் போட்டியில் போட்டியிட உள்ளன.

இந்த ஆண்டு, தேர்ந்தெடுப்புகள் பிராந்திய ரீதியாக செய்யப்பட்டுள்ளன, இது இந்தியாவின் தொலைதூர நகரங்களான ஒடிசா கச்சரில் உள்ள குர்தா மற்றும் அசாமில் உள்ள கம்ரூப் ரூரல் மற்றும் குஜராத்தில் உள்ள அம்ரேலி போன்ற அடுத்த தலைமுறை இந்திய கண்டுபிடிப்பாளர்களை போட்டி சென்றடைய உதவியது. 'சுற்றுச்சூழல் மற்றும் நிலைப்புத்தன்மை' கருப்பொருளை உள்ளடக்கிய யூத் டிராக்கில் சமர்ப்பிக்கப்பட்ட முதல் 50 யோசனைகள் வழக்கத்திற்கு மாறானவையாக மட்டுமின்றி, அதிகப்படியாக எதிர்காலத்தை மையமாகக் கொண்டவையாகும். காடழிப்பு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, கடல் மாசுபாடு, கார்பன் உமிழ்வு, நிலைப்புத்தன்மையற்ற பேக்கேஜிங் மற்றும் மோசமான நீர் மேலாண்மை போன்ற பிரச்சினைகள் இளைஞர்களுக்கு மிகவும் முக்கியமான பகுதிகளாக உள்ளன.

மறுபுறம், ‘ஸ்கூல்’ டிராக், 'சமூகம் மற்றும் உள்ளடக்கம்' கருப்பொருளின் கீழ் தங்கள் யோசனைகளை சமர்ப்பித்தது. அவர்களின் யோசனைகள் பள்ளி மாணவர்களிடையே மனநோய் போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் கவனம் செலுத்துகின்றன, எல் ஜி பி டி கியூ சமூகத்திற்கான உள்ளடக்கிய சூழல் இல்லாமை, சமூகத்தில் பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினரிடையே டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் கல்வி கற்றல் மற்றும் தொழில்நுட்ப திறன், பணிக்குத் தயாராக வேண்டிய தொழில்நுட்பத் திறன் தேவைக்கும் கல்விக் கற்றலுக்கும் இடையில் நீடிக்கும் இடைவெளி ஆகியவற்றை அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

100 அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மொத்தம் 232 பங்கேற்பாளர்கள் இப்போது 'சால்வ் பார் டுமாரோ' போட்டியின் அடுத்த கட்டத்திற்குத் தயாராகி உள்ளனர், அங்கு அவர்கள் நிபுணத்துவ பயிற்சி மற்றும் வழிகாட்டுதலின் மூலம் விளக்கக்காட்சி மற்றும் பயனுள்ள தகவல் தொடர்பு திறன்களைப் பெறுவர். ஜூலை மத்தியில் தொடங்கும் பிராந்திய சுற்றுகளுக்குத் தயாராக இது அவர்களுக்கு உதவும்.

" நமது இளைஞர்களிடம் மகத்தான சக்தியும், நேர்மறையான சமூக மாற்றத்தை உண்டாக்கும் ஆற்றலும் இருப்பதாக சாம்சங் நம்புகிறது. எங்களின் முதன்மையான சி எஸ் ஆர் திட்டமான 'சால்வ் பார் டுமாரோ', இந்த ஆண்டு முதல் முறையாக, பள்ளி மாணவர்களின் தனித்துவமான திறன்கள் மற்றும் யோசனைகளைப் பூர்த்தி செய்யும் வகையை உருவாக்கியுள்ளது. யோசனைகளின் தரத்தில் முன்னேற்றம் அவர்கள் கொண்டிருக்கும் படைப்பாற்றல் மற்றும் புதுமையான மனநிலைக்கு ஒரு சான்றாகும். இந்த ஆண்டு முதன்முறையாக, வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு ஆகிய ஐந்து பிராந்தியங்களுக்குள் ஆழமாகச் செல்ல முடிவு செய்துள்ளோம் - நாட்டின் சில தொலைதூரப் பகுதிகளிலிருந்து அதிக பரந்த அடிப்படையிலான பங்கேற்பைப் பெறுகிறோம். நாங்கள் சில நன்கு வெளிப்படுத்தப்பட்ட யோசனைகளைப் பெற்றுள்ளோம், மேலும் இது போன்ற விளக்கக்காட்சிகள் மற்றும் சிந்தனையின் தெளிவு இளைஞர்களிடம் இருந்து வருவது நம்பமுடியாத அளவிற்கு ஊக்கமளிக்கிறது" என்று சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் கார்ப்பரேட் துணைத் தலைவர் எஸ் பி சுன் அவர்கள் கூறினார்.

“சாம்சங் ‘சால்வ் பார் டுமாரோ இந்த ஆண்டு சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் உள்ளடக்கம் போன்ற கருப்பொருள்களை ஆதரிக்கும் நோக்கத்துடன் வளர்ந்துள்ளது. தனித்தனி தடங்கள் - இளைஞர்கள் மற்றும் பள்ளி - அனைத்து போட்டியிடும் அணிகளுக்கும் சம வாய்ப்புகள் மற்றும் சமநிலை-வாய்ப்பினை வழங்கியுள்ளன. நாடு முழுவதும் உள்ள இளம் மனங்களில் இருந்து இது போன்ற சிந்தனையைத் தூண்டும் கருத்துக்கள் வருவதைப் பார்ப்பது நம்பமுடியாதது. சாம்சங் நிறுவனத்துடன் இணைந்து, அடுத்த தலைமுறையில் சிக்கலைத் தீர்க்கும் மனநிலையை ஊக்குவிப்பதே எங்கள் முயற்சியாகும், இது நாட்டில் ஸ்டார்ட்-அப் சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதில் ஊக்கியாக செயல்படும்” என்று எஃப்ஐஐடி, ஐ ஐ டி-டில்லி, மேலாண்மை இயக்குனர் பேராசிரியர் திருமதி.ப்ரீத்தி ரஞ்சன் பாண்டா, கூறினார்.

அடுத்த கட்டத்தில் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய ஐந்து பிராந்தியங்களில் இருந்து இரண்டு அணிகள் ஒவ்வொரு டிராக்கிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு, 20 அணிகள் கொண்ட தேசியக் குழுவை உருவாக்கும். சிறந்த 20 அணிகள், சாம்சங் மற்றும் தொழில்துறை வல்லுனர்களின் கடுமையான வழிகாட்டுதல் திட்டங்களுடன், அவர்களின் தொழில்நுட்ப மற்றும் மென் திறன்களை மேம்படுத்த தீவிர பயிற்சியில் ஈடுபடும். இந்த குழுக்கள் குருகிராமில் உள்ள சாம்சங் பிராந்திய தலைமையகம் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள சாம்சங் ஆர்&டி மையங்களில் நடக்கும் ‘புத்தாக்க நடை’யிலும் கலந்து கொள்ளும்.

## ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டைன்மெண்ட் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பில் எம். ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் ‘பிரதர்‘ திரைப்படத்தின் முதல் பாடலான ‘மக்காமிஷி‘ வெளியாகி ரசிகர்களின் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது




சென்னை, 21 ஜூலை 2024: ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டைன்மெண்ட் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பில் எம். ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் 'பிரதர்' திரைப்படத்தின் முதல் பாடலான 'மக்காமிஷி', அதன் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ், எழுதி பாடிய பால் டப்பா மற்றும் நடனம் அமைத்த சாண்டி மாஸ்டர் ஆகியோரால் வெளியிடப்பட்டது. 'மக்காமிஷி' என்றால் என்ன என்று சமூக வலைதளங்களில் சுற்றி வந்த கேள்விக்கு கெத்து, மாஸ், ஸ்டைல் என்று அர்த்தம் வரும் என தெரிவித்து ஹாரிஸ் ஜெயராஜ், பால் டப்பா மற்றும் சாண்டி மாஸ்டர் யூகங்களுக்கு எல்லாம் சில தினங்களுக்கு முன் முற்றுப்புள்ளி வைத்திருந்த நிலையில் இப்பாடல் சனிக்கிழமை (ஜூலை 20) அன்று வெளியிடப்பட்டது. வெளியான சில மணி நேரங்களிலேயே ரசிகர்களின் உற்சாக வரவேற்பை பெற்றுள்ள 'மக்காமிஷி' பாடல் இளைஞர்களால் வைப் (எவீநெ) செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு சமூக வலைதளங்களில் எக்கச்சக்க பார்வைகள், இதயங்கள் மற்றும் லைக்குகளை அள்ளி வருகிறது. 'மக்காமிஷி' பாடல் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதை கண்டு மிகுந்த உற்சாகமடைந்துள்ள படக்குழவினர் 'பிரதர்' திரைப்படத்தின் இதர பாடல்களை அடுத்தடுத்து வெளியிட தயாராகி வருகின்றனர். 'பிரதர்' திரைப்படத்திற்காக ஐந்து பிரமாதமான பாடல்களை ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைத்துள்ளார். தமிழ் சினிமாவில் நீண்ட நாட்களுக்கு பிறகு ஒரு முழுமையான ஆல்பமாக இது இருக்கும் என்று இயக்குநர் ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

'பிகில்', 'நட்பே துணை', 'தடம்' உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட வெற்றி படங்களை விநியோகம் செய்து, 'தாராள பிரபு', 'சாணி காயிதம்', 'மத்தகம்', மற்றும் 'அகிலன்' என தயாரிப்பிலும் முத்திரை பதித்து வரும் ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பில் பிரம்மாண்ட பட்ஜெட்டில் உருவாகியுள்ள 'பிரதர்' படத்தின் இசை உரிமையை திங்க் மியூசிக் நிறுவனம் வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்படத்தின் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை ஜீ தமிழும் ஓடிடி உரிமையை ஜீ5 தளமும் பெற்றுள்ளன. ஒரு இளைஞன் மற்றும் அவரது சகோதரிக்கு இடையேயான பாசப்பிணைப்பை கலகலப்பாகவும் உணர்ச்சிப்பூர்வமாகவும் சொல்லும் குடும்ப திரைப்படமான 'பிரதர்', ஜெயம் ரவியின் முப்பதாவது படம் என்பது குறிப்பிடத்தக்கது. 'பிரதர்' படத்தில் பிரியங்கா மோகன் நாயகியாக நடிக்க, நட்டி, பூமிகா, சரண்யா பொன்வண்ணன், விடிவி கணேஷ், சீதா, அச்யுத் குமார், 'கே ஜி எஃப்', 'புஷ்பா', 'ஜெய் பீம்', புகழ் பிரபல தெலுங்கு நடிகர் ராவ் ரமேஷ், எம் எஸ் பாஸ்கர், சதீஷ் கிருஷ்ணன், சுரேஷ் சக்கரவர்த்தி, விருத்தி விஷால் மற்றும் மாஸ்டர் அஷ்வின் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். 'பிரதர்' திரைப்படத்தை விரைவில் வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 'பிரதர்' படக்குழுவினர் விவரம் தயாரிப்பு நிறுவனம்: ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் எழுத்து, இயக்கம்: ராஜேஷ் எம் இசை: ஹரிஸ் ஜெயராஜ் நடிப்பு: ஜெயம் ரவி பிரியங்கா அருள் மோகன் பூமிகா சாவ்லா வி டி வி கணேஷ் நட்ராஜ் சுப்ரமணியன் ராவ் ரமேஷ் அச்யுத் குமார் சரண்யா பொன்வண்ணன் சீதா சதீஷ் கிருஷ்ணன் எம் எஸ் பாஸ்கர் சுரேஷ் சக்ரவர்த்தி விருத்தி விஷால் மாஸ்டர் அஷ்வின் நிர்வாக தயாரிப்பாளர்கள்: கே.எஸ். செந்தில் குமார் வி.குரு ரமேஷ் விநியோகத் தலைவர்: எஸ்.கிரண் குமார் ஒளிப்பதிவு: விவேகானந்த் சந்தோஷம் படத்தொகுப்பு: ஆஷிஷ் ஜோசப் கலை இயக்குநர்: ஆர்.கிஷோர் நடன அமைப்பு: சாண்டி, சதீஷ் கிருஷ்ணன் பாடலாசிரியர்கள்: தாமரை, பார்வதி மீரா, விக்னேஷ் ராமகிருஷ்ணா, பால் டப்பா தயாரிப்பு கட்டுப்பாட்டாளர்கள்: எஸ்.சரவண குமார் கார்த்திக் ஆனந்தகிருஷ்ணன் ஆடை வடிவமைப்பாளர்கள்: பிரவீன் ராஜா, பல்லவி சிங் ஒலி வடிவமைப்பாளர்: டி.உதயகுமார் டி எஃப்.டெக் வி எஃப் எக்ஸ்: ஆர். ஹரிஹர சுதன் டி ஐ: அஸ்வினி - புரோமோ ஒர்க்ஸ் ஸ்டில்ஸ்: முருகதாஸ் ஒப்பனை: பிரகாஷ் வடிவமைப்புகள்: ராஜா (டிசைன் பாயிண்ட்), புரோமோ கட்ஸ்: நந்தன் சூர்யா, மக்கள் தொடர்பு: நிகில் முருகன்.

## உத்தரகாண்ட் நிலச்சரிவில் சிக்கி 3 பக்தர்கள் பலி; 8 பேர் படுகாயம்

சென்னை, 21 ஜூலை 2024: உத்தரகாண்ட் நிலச்சரிவில் சிக்கி 3 பக்தர்கள் பலியானார்கள். 8 பேர் படுகாயம் அடைந்தனர்.

உத்தரகாண்ட் மாநிலம் கேதார்நாத்தில் உள்ள கோவிலுக்கு ஆண்டுதோறும் ஏராளமான பக்தர்கள் யாத்திரையாக வந்து வழிபாடு நடத்துவர். அந்த வகையில் இந்த ஆண்டு யாத்திரை தற்போது நடைபெற்று வருகிறது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கேதார்நாத்தில் உள்ள கோவிலுக்கு யாத்திரையாக வருகின்றனர்.

இந்நிலையில், கேதார்நாத் பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக மலைப் பகுதியில் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு வருகிறது.

அந்த வகையில் கவுரிகண்ட் பகுதியில் நேற்று திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. அப்போது அவ்வழியாக கேதார்நாத் கோவிலுக்கு சென்று கொண்டிருந்த பக்தர்கள் நிலச்சரிவில் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் நிலச்சரிவில் சிக்கி படுகாயமடைந்த 8 பேரை மீட்டனர். ஆனால், இந்த சம்பவத்தில் 3 பக்தர்கள் உயிரிழந்தனர். உயிரிழந்த 3 பேரின் உடலை மீட்ட மீட்புக்குழுவினர் பிரேத பரிசோதனைக்கு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

உயிரிழந்த 3 பேரில் 2 பேர் மகாராஷ்டிர மாநிலத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் புஷ்கர் சிங் தாமி இத்துயர சம்பவம் குறித்து எக்ஸ் தள பக்கத்தில், "கேதார்நாத் யாத்திரை பாதையில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 3 பேர் உயிரிழந்த சம்பவம் மிகவும் வருந்தத்தக்கது. மேலும் காயம் அடைந்த 8 பேர் விரைவில் குணமடைய வேண்டுகிறேன்" என்று கூறியுள்ளார்.

மேலும், மீட்பு பணிகள் தொடரும் என்றும் காயமடைந்தவர்களுக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். "விபத்து நடந்த இடத்தில் நிவாரண மற்றும் மீட்பு பணி நடந்து கொண்டு இருக்கிறது, நான் தொடர்ந்து அதிகாரிகளுடன் பேசி வருகிறேன். விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக சிறந்த சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன்," எனவும் அவர் குறிப்பிட்டார்.